**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

O.S. No. 119/2016

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 13th day of June 2023.

| | |
|---|---|
| Name : கொண்டம்மாள் | Caste: |
| Husband's Name: வருதன் | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |
| Date : | |

**13-06-2023**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

காட்டு வழக்கு பிரச்சனைக்காக இந்த வழக்கை போட்டுள்ளேன். தாவா சொத்து பத்துமலை (எ) முனியாண்டிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1961 ம் ஆண்டிலிருந்து நான் தான் காடு ஓட்டி வருகிறேன். பத்துமலை எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் காட்டை ஓட்டி வருகிறேன். குத்தகைக்கு கொடுத்தார்கள். குத்தகை பணம் என்னிடம் கேட்கவில்லை. தாவா சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள் பத்துமலை என்பவரின் பெயரில் இன்றைய தேதி வரை உள்ளது என்றால் ஆமாம். அவர் காட்டுக்குள் வருவதில்லை. பத்துமலை நிலம் குத்தகைக்கு எழுதி கொடுத்தன் அடிப்படையில் நான் அந்த தோட்டத்திற்கு வந்தேன் என்றால் ஆமாம். பிரதிவாதிகள் பத்துமலையின்

வாரிசுகள் என்றால் எனக்கு யார் என்றே தெரியாது. 1990–ம் ஆண்டு 1ம் பிரதிவாதி பன்னீர்செல்வத்திடம் தாவா சொத்து சம்மந்தமாக குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் ஆமாம்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.